# .மு.க. வரவு?

தம்பித்துரை தரப்பிலிருந்து சொல்லப்பட்டுள்ளதே இது மாதிரி தலை தெறிக்க ஓடுவதற்குக் காரணம் என்கிறார்கள்"

"அடேங்கப்பா... பெரிய தொகைதான். நெக்ஸ்ட்"

"பாட்டாளி மக்கள் முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த சி.என்.ராமமூர்த்தி உள்ளிட்ட சில நிர்வாகிகள் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை அப்பாயின்மென்ட் கொடுத்த நேரத்தில் சந்திக்கச் சென்றுள்ளனர். அவரோ அந்த நேரத்தில் பழம்பெரும் நடிகை அஞ்சலிதேவியின் சதாபிஷேகத்திற்கு சென்று விட்டார். ஆனால் கார்டனில் உள்ளவர்கள், 'கொஞ்சம் வெயிட் பண்ணுங்கள். அம்மா இப்போது வந்து விடுவார்கள்' என்று கூறி காக்க வைத்துள்ளார்கள். சொன்னபடியே ஜெ. வரவும், சி.என்.ராமமூர்த்தி உள்ளிட்ட தலைவர்கள் ஜெ.யை சந்தித்தார்கள். அப்போது, வன்னியர்களுக்கு ஜாதி வாரி இட ஒதுக்கீடு வழங்குவது உள்ளிட்ட சில கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்தார்களாம். அந்த மனுவைப் பெற்றுக் கொண்ட ஜெ., 'நீங்கள் பென்னாகரத்தில் அ.தி.மு.க.வை ஆதரிக்கிறீர்கள் அல்லவா?' என்று கேட்டிருக்கிறார். அதற்கு ராமமூர்த்தி தரப்பினர், 'ஜாதி வாரிய இட ஒதுக்கீட்டை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பரிசீலிப்போம் என்று அறிவிப்பு மட்டும் செய்யுங்கள். பென்னாகரத்தில் அ.தி.மு.க.வை ஆதரிக்கிறோம் என்று அறிக்கை கொடுத்து விடுகிறோம்' என்றார்களாம். அதற்கு எந்த பதிலும் சொல்லாமல் மனுவை வாங்கிக் கொண்டு அனுப்பிவிட்டாராம் ஜெ. ஆனால், அக்கட்சியின் சேனல் செய்திகளில் 'பென்னாகரத்தில் அ.தி.மு.க.விற்கு வன்னிய அமைப்புகள் ஆதரவு' என்று சொல்லப்பட்டதைக் கேட்டு நொந்து போயிருக்கிறார்கள் பாட்டாளி மக்கள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள்"

"ஓஹோ.... வேறு செய்தி ஏதாவது?"

"மாம்பழத்திற்கு' பெயர் போன பகுதியின் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவரிடம் தூது சென்றுள்ளார் தி.மு.க. பிரமுகர் ஒருவர். 'செலவு பண்ணி ஜெயிச்சு என்ன பிரயோஜனம்? பேசாமல் எங்களிடம் வந்து விடுங்கள். எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்' என்றாராம். ஆனால் அந்த எம்.எல்.ஏ.வோ, 'அதெல்லாம் வேண்டாம் சார். ஏற்கெனவே உங்க கட்சி அமைச்சர் எனக்கு வேண்டியதை செய்து கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். நான் என்ன சொன்னாலும் அவர் தட்டுவதில்லை. ஏற்கெனவே எங்க கட்சியில இருந்து மீசைக்காரர் (டி.எம்.செல்வகணபதி) அங்கு வந்து விட்டார். அதனால் இப்போதைக்கு ஏதும் வேண்டாம். ஆனா வரணும்னு முடிவு பண்ணிட்டேன்னா அதுதான் எனக்கு உதவுற அமைச்சர் இருக்கிறாரே. அவர் மூலமாகவே உங்க கட்சிக்கு வந்துடுறேன்' என்று பேசி அனுப்பி விட்டாராம்"

"அப்படியென்றால் தி.முக.விற்கு இன்னொரு வரவு இருக்கிறது என்று சொல்லுங்கள்"

"பொறுத்திருந்து பார்ப்போம். அடுத்த செய்தியைக் கேளுங்கள். பென்னாகரம் இடைத் தேர்தலுக்காக பா.ம.க. சார்பில் முதன் முறையாக மைக்ரோ ப்ளான் ஒன்று துவங்கப்பட்டுள்ளது. 50 கம்ப்யூட்டர் என்ஜினீயர்களை ஸ்பெஷலாக வரவைத்து தேர்தல் வேலைகளை ஹைடெக்காக செய்யத் தொடங்கியுள்ளார்கள்.





பிறந்தநாள் நிகழ்ச்சியில்...

பா.ம.க.வின் அங்கமான சமூக முன்னேற்ற சங்கத்தினரின் கூட்டத்தை தர்மபுரியில் ராமதாஸ் தங்கியிருந்த அதியமான் பேலஸில் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் இந்த மைக்ரோ ப்ளான் பற்றி 3 மணி நேரம் விளக்கி இருக்கிறார் பா.ம.க. எம்.எல்.ஏ. வேல்முருகன். 'மைக்ரோ ப்ளான்படி கட்சியினர் எங்கு என்ன வேலை செய்கிறார்கள் என்பதைக் கண்டறிய முடியும். ஒவ்வொரு நாளும் நம் வாக்கு வங்கியின் வளர்ச்சி, வீழ்ச்சி இரண்டையும் இங்கிருந்தே பகுதி வாரியாக துல்லியமாக கணிக்க முடியும்' என்று பேசிய வேல்முருகன்,

'நம் இயக்கத்தைப் பற்றியும், தி.மு.க. தலைவர்கள் நம்மை இழிவுபடுத்திய விஷயங்களையும் தொகுத்து 2 1/2 மணி நேரம் ஓடக்கூடிய சி.டி.யாக தயாரிக்கப்பட்டுள்ளது. சமூக முன்னேற்ற சங்கத்தினர் இந்த சி.டி.க்களை ரகசியமாக தொகுதி முழுக்க வெளியிட வேண்டும்' என்று நீண்ட பாடம் எடுத்துள்ளார். எஸ்.எம்.எஸ். மூலம் தினமும் வாக்கு கேட்பது; வெளியூர் வாக்காளர்களின் பயணச் செலவை ஏற்று வாக்களிக்கக் கடிதம் எழுதி அழைப்பது என்று ஏகப்பட்ட வியூகங்களை விளக்கியிருக்கிறார் வேல்முருகன். இந்நிலையில் தொகுதியைக் கண்காணிக்க 115 பேர் கொண்ட டீமை ஏரியா வாரியாக பிரித்து அனுப்பியுள்ளனர் சமூக முன்னேற்ற சங்கத்தினர்" என்ற சாலமன், யாருக்கோ எஸ்.எம்.எஸ். அனுப்பத் தொடங்கினார்.

படங்கள் : வேணு